DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 68/2023

Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.திவ்யா | Caste: |
| Father's Name | : மகேந்திரன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

25.05.2026 – 12.40 PM

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் உடையார் கூட்டத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை 07.30 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்த போது வீட்டிற்கு வெளியே கூட்டமாக 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். நான் கூட்டத்திற்கு சென்று பார்த்த போது என்னை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள். அதனால் எனது உறவினர்களுடன் சேர்ந்து என்னை கமுதி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்து அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று சிவகங்கை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றுக்கொண்டேன். மேற்படி அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. 11.05.2022ம் தேதி காலை 07.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் மூவரும் சேர்ந்து எனது தாயாரிடம் சென்று என்னை பற்றி அவதூறாக கூறியதாகவும் எனது தாயாரிடம் என்னை கொன்று விடுவதாக மிரட்டியதால் அதில் எனக்கு மனக்கஷ்டம் ஏற்பட்டு நான் அன்றையே தினமே 08.30 மணியளவில் சானி பவுடரை குடித்து வாந்தி எடுத்ததால் மேற்படி முதல் விசாரணையில் கூறிய அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரித்தபோதும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு வழக்கிலிருந்து எதிரிகளைக் காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:40:11 +0530